# I ADDL. DISTRICT & SESSIONS COURT, VELLORE
## DEPOSITIONS OF WITNESSES
## (CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)
## DEPOSITIONS OF WITNESSES D.W.1
## OS.NO.56/2018( OS No.24/2019,57/2019,66/2019)
## Joint Trial

**Name** : Selvam

**Father/Husband Name** : Ravikumar

**Age** : 39

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 25.02.2026**

இரு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

விசாரணை தொடங்கிய நேரம் : 12.55 p.m

குறுக்கு விசாரணை

வழக்கு எண்.56/2018 என்ற வழக்கில் நான் 6 வது பிரதிவாதி என்றால் சரிதான். ஆதிமூல கவுண்டர் சாம்பசிவம் மற்றும் கோவிந்தசாமியின் ஆகியோர்களின் அப்பா என்றால் சரிதான்.ஆதிமூல கவுண்டர் எனது தந்தை வழி பாட்டன் என்றால் சரிதான். ஆதிமூலத்திற்கு 2 மகன்கள் என்றால் சரிதான். ஒருவர் சாம்பசிவம் மற்றொருவர் கோவிந்தசாமி என்றால் சரிதான். இந்த வழக்கு சொத்துக்களை தவிர ஏனைய சொத்துகள் அனைத்தும் ஆதிமூல கவுண்டர் தன் பிறப்புரிமையில் அடைந்த சொத்துகள் என்றால் சரிதான்.

ஆதிமூல கவுண்டர் உயிருடன் இருந்தபோது சாம்பசிவம் மற்றும் கோவிந்தசாமி ஆகியோர்கள் அவரின் பிறப்புரிமை படி அடைந்த சொத்துக்களை தன் மகன்கள் இருவரும் அடைந்த கொள்ள குடும்ப தீர்வு படிவம் ( memorandum of family arrangements)ஏற்படுத்தினார் என்றால் சரிதான். அந்த குடும்ப ஏற்பாடு ஏற்பட்ட தேதி 07.02.1978. அந்த ஆவணம் வா.சா.ஆ. 12 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

ஆதிமூல கவுண்டர் சம்மதித்து எழுதிய குடும்ப தீர்வில் சாம்பசிவம் கையெழுத்து போட்டுள்ளார். கோவிந்தசாமி கை ரேகை வைத்துள்ளார்.

பெருவிரலா சிறுவிரலா என்று தெரியாது. அந்த ஆவணத்தில் ஆதிமூல கவுண்டர் சாட்சி கையெழுத்து போட்டுள்ளார்.

கோவிந்தசாமி அவருக்கு கிடைத்த பாக உரிமையை தன் சகோதரருக்கு பாக பிரிவினை அக்குவிடுதலை பத்திர படிக்கு உரிமையை விற்றுவிட்டார் என்றால் சரிதான், ஆனால் அதில் பெண்கள் யாரும் கையெழுத்து போடவில்லை என்று சாட்சி சொல்கிறார். அது சரியான பிரதிபலனுக்காக பதிவு செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரிதான்.

கோவிந்தசாமிக்கு குடும்ப தீர்வில் கிடைத்த நிலங்களின் பெரும் பகுதியை இந்திய ரயில்வே துறை, இந்திய உணவு கழகத்திற்கு ரயில் பாதை அமைப்பதற்காக கட்டாய நில ஆர்ஜிதம் செய்யப்பட்டது என்றால் சரிதான். சாட்சி சொல்கிறார் அந்த நிலம் எடுத்ததற்காக தான் பன்னீர்செல்வம் மற்றும் லிங்கமூர்த்தி ஆகியோர்களுக்கு வேலை கொடுத்தார்கள்.

மீதம் இருந்த சுமார் 32 செண்ட் நிலத்தை கோவிந்தசாமி என்பவர் சாம்பசிவத்திற்கு சரியாக பிரதிபலனுக்கு 17.10.1994 ல் பத்திரம் முன்னிலைக்கு விற்றுவிட்டார் என்றால் சரிதான். இந்த பத்திரத்தில் வழக்கின் பிரதிவாதிகள் கலா மற்றும் அருள்மொழி சாட்சி கையெழுத்து செய்திருக்கிறார்கள் என்றால் சரிதான்.

கோவிந்தசாமி 09.11.2006 ல் இறந்துவிட்டார். வழக்கு தாக்கல் செய்த அனைவரும் சாம்பசிவத்தின் வகையறாக்கள் என்றால் சரிதான். வழக்கின் பிரதிவாதிகள் அனைவரும் கோவிந்தசாமியின் வகையறாக்கள் என்றால் சரிதான்.

குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

விசாரணை முடிந்த நேரம் : 01.20 p.m.
சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக் கொண்டு கையெழுத்திட்டார்.

G SANTHI
Digitally signed by G SANTHI
Date: 2026.02.25 18:43:05 -0100

முதலாவது கூடுதல் அமர்வு நீதிபதி,
வேலூர்.